பக்கங்கள்:-19+06

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## ரணிலை ஆதரிக்கும் பிரசாரம் ஜூன் 30 ஆம் திகதி ஆரம்பம்



ஜனாதிபதித் தேர் தலை இலக்கு வைத்து தற்போதைய அரசால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை மக்கள் 02

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 02 | சனிக்கிழமை | 15.06.2024 | அதிர்வு 319

# யாழில் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய ஆணின் சடலம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடத்து வெளி கடற்கரை பகுதியில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது

ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் பிரதே பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்கா வற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் மு.கா. யாருக்கு ஆதரவு?

## இன்னும் முடிவில்லை என்கிறார் ஹக்கீம்

"வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிக்க வேண் டும் என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ் லிம் கட்சி இன்னும் இறுதியான - உறு தியான முடிவை எடுக்கவில்லை."

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். 02



# கிண்ணியாவில் யானை தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் சாவு!







(எச்.எம். ஹலால்தீன், ஏ.எச். ஹஸ்பர்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட வான்எல சுண்டியாற்றுப் பகுதியில் யானை தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகர மாக உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத் தில் கிண்ணியா, இடிமனையைச் சேர்ந்த 26 வயதுடைய அப்துல் சத்தார் முகம்மது அயாஸ் என்பவரே சாவடைந்துள்ளார்.

மேற்படி நபர், தனது தந்தையின் பண் ணைக்குச் சென்ற வேளையில் மறைந் திருந்த யானை தாக்கியுள்ளது. 02







# கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் எதிர்ப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கவயன் குடியிருப்புப் பகுதியில் அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணியில் கனிய மணல் அகழ்வு இடம்பெற இருந்த நிலையில் இன்று காலை 10 மணியளவில் ஒன்றுகூடிய அப்பகுதி மக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கவயன் குடியிருப்புப் பகுதியில் சுமார் 160 ஏக்கர் பனை மரங்களைக் கொண்ட குறித்த காணி சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்டு அடைக்கப்பட்டுள்ளது.

அந்தக் காணி இந்திய தனியார் கம்பனி ஒன்றுக்குக் கனிய மணல் அகழ்வுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த காணியில் உள்ள பல நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டு, கனிய மணல் அகழ்வு இடம்பெற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இந்தநிலையில், அந்தக் காணிக்குள் இன்று காலை வருகை தந்த சிலர் காணியில் கனிய மணல் அகழ்வில் ஈடுபட நடவடிக்கை எடுத்த நிலையில் அப்பகுதி மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

காணியில் என்ன திட்டம் முன்னெடுக்கப் போகின்றார்கள் என்ற விடயம் தமக்குத் தெரியாது என்றும், அதை வெளிப் படையாகத் தமக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அந்தப் பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மக்களுடன் கலந்துரையாடினார். பின்னர் அடாத்தாக பிடிக்கப்பட்ட காணிப் பகுதிக்குச் சென்று அங்கு பொறுப்பாக இருந்தவருடன் பேசினார். மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றமையால் இவ்விடத்தில் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்க வேண்டாம் என்றும், மக்களுடன் பிறிதொரு தினத்தில் இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.

இதையடுத்து அந்தக் காணியில் நின்ற உரிய நபர், எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காத நிலையில் மக்களும் நாடாளுமன்ற உறுப்பினரும் அங்கிருந்து வெளியேறினர்.




## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளோம். அந்த அணியுடன் பயணிக்கவே எதிர்பார்க்கின்றோம். தற்போதைய சூழ்நிலையில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவிலேயே இருக்கின்றோம். எனினும், கட்சி மாற்று முடிவை எடுத்தால் அது பற்றியும் பரிசீலிக்க வேண்டி வரும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சகாக்கள் அறிவிப்புக்களை விடுத்திருந்தாலும், ரணில் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அந்த அறிவிப்பை ரணில் விக்கிரமசிங்க விடுக்கும் வரை நம்ப முடியாது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியே வெற்றி பெறும் என்ற அதிக நம்பிக்கை உள்ளது." - என்றார்

இதன் முதலாவது கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி மாத்தறையில் நடைபெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகளை அமைச்சர் காஞ்சன விஜேசேகர முன்னெடுக்கவுள்ளார்.

நாளை 16 ஆம் திகதியே இந்தக் கூட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மாத்தறையில் ஏற்பட்ட வெள்ள நிலையால் 30 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதன்பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் அரசின் வேலைத் திட்டங்களை முன்வைத்து, அதன்மூலம் வாக்கு வேட்டை நடத்தும் பிரசாரம் ஆரம்பமாகவுள்ளது.

## ரணிலை ஆதரிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மயப்படுத்துவதற்காக விசேட மக்கள் சந்திப்புகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கிண்ணியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பகுதியில் இரண்டு வாரங்களுக்குள் யானை தாக்கி 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# தற்போது மக்கள் சக்தியாக மாறியுள்ள பெருந்தோட்ட நிறுவனங்களின் சக்தி!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(பொகவந்தலாவ)

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைத்த 1700 ரூபா சம்பள வெற்றியானது - பெருந்தோட்ட நிறுவனங்களின் சக்தியானது மக்கள் சக்தியாக உருவெடுத்துள்ளது என்று இலங்கை தொழிலாளர் காங்ரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டம் ஹேவாஹெட்ட பிரதேச சபையில் பட்டகல கிராம மக்களுக்கு குடி தண்ணீர் திட்டத்தை உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்து மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் குடி தண்ணீர் திட்டமானது 84 குடும்பங்களுக்குப் பயன் தரகூடிய வகையில் அமைக்கப்பட்டது. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிப்பெறுமதியானது 6.5 மில்லியன் ரூபாவாகவும் குழாய்களுக்கான நிதி ஒதுக்கீடானது 8.4 மில்லியன் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

பட்டகல கிராம மக்களின் இடைவிடா முயற்சியாலும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டாலும் இந்தச் செயற்றிட்டமானது நிறைவு பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அனுராதா ஜெயரத்ன தேசிய நீர்வளங்கள் வடிகால் அமைப்பின் உப தலைவர் சஞ்சீவ விஜயகோன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, கண்டி மாவட்டத்துக்குப் பொறுப்பான தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாட்டின் ஜனாதிபதி ஊடாக அஸ்வெசும திட்டத்தின் கீழ் 20 லட்சம் பேருக்குக் காணி உரிமை கிடைக்கப் பெற்றுள்ளது. எதிர்கட்சியினரைப் பொறுத்தவரையில் இயலாது, கிடையாது, வேண்டாம் இந்த மூன்று வார்த்தைகளை மாத்திரம் பிரயோகித்து வருவார்கள். அதனை ஜனாதிபதி அவர்கள் சாதித்து காட்டியிருக்கிறார்.

தேர்தல் ஒன்று வரும்போது மக்களின் பலம் என்னவென்று மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மக்களிடம் சென்று வாக்கு கேட்பவர்கள் மக்களுக்கு என்ன வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளனர் என அவதானம் செலுத்த வேண்டும். நாம் எரிவாயுவுக்கும் எரிப்பொருளுக்கும் பட்ட கஷ்டங்களை ஒருபோதும் மக்கள் மறக்கமாட்டார்கள் என நான் நம்புகிறேன்.



கொரோனா காலப் பகுதியில் சில அரசியல்வாதிகள் நினைத்தார்கள் மக்கள் இறந்து விடுவார்கள் என்று. அப்போது அரச தோல்வியடையும் என்றும் எண்ணியிருந்தனர்.

நுவரெலியா மாவட்ட மக்களுக்கு அண்மையில் ஒரு பிரச்சினை ஏற்பட்டபோது நான் அங்கு சென்றேன் அப்போது ஊடக நண்பர்கள், நான் அடாவடி அரசியல் செய்ததாக செய்திகள் வெளியிட்டனர். ஆனால் அங்கு மக்களுக்கு நடந்த அநீதிகளை ஊடகங்கள் வெளிபடுத்தவில்லை. அநுரகுமார திஷாநாயக்க, அடாவடி அரசியலை நாங்கள் ஒருபோதும் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டோம் என கூறினார். தொழிலாளர்களுக்கு குரல் கொடுப்பதாக அடிக்கடி பேசுவார். ஆனால் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு விலைபோய்விட்டார்.

நான் ஒருபோது நாடாளுமன்றத்தை தீ வைப்பேன் என கூறவில்லை. ஜனாதிபதி மளிகையை கைபற்றுமாறு கூறவில்லை. மக்கள் கஷ்டத்தில் இருக்கும் போது நான் போய் டீல் பேசவில்லை. நான் ஒருபோதும் மாற்று கட்சியினரை பற்றி பேசியதில்லை. மூத்த உறுப்பினர் ஒருவர் மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதை விட மக்களுக்கு என்ன செய்தார் என மக்கள் மத்தியில் சென்று சொல்ல வேண்டும்.

எதிர்கட்சித் தலைவர் 13 அவது திருத்தத்தை அமுல்படுத்தப் போகிறார் என்று யாழ்ப்பாணத்தில் வைத்து கூறியிருந்தார். 13 ஆவது சீர் திருத்தம் என்பது ஒரு தவறான முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த சீர் திருத்தம் என்பது யாழ்ப்பாண மக்களுக்கு மாத்திரமல்ல நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் அது எந்த சட்டமாக இருந்தாலும் மக்களுடைய ஆணையின் கீழ் கொண்டுவரப்படும்.- என்றார்.







# இலங்கைக்குக் கடத்த முயன்ற ரூ.150 கோடி மதிப்பிலான போதைப்பொருள் வேளாங்கண்ணியில் நேற்று பறிமுதல்

**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற ரூ.150 கோடி மதிப்பிலான போதைப்பொருளை வேளாங்கண்ணியில் க்யூ பிரிவு பொலிஸார் நேற்று கைப்பற்றினர். அதேவேளை, காரில் இரகசிய அறை அமைத்து கடத்திய 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் இருந்து இலங்கைக்குப் பல கோடி ரூபா மதிப்பிலான போதைப்பொருள் கடத்த இருப்பதாக நாகை க்யூ பிரிவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, வேளாங்கண்ணி ஆரிய நாட்டு தெருவில் உள்ள ஒரு தனியார் விடுதியில் ஆய்வாளர் ராமச்சந்திர பூபதி தலைமையிலான க்யூ பிரிவு பொலிஸார் தீவிர சோதனை நடத்தினர். விடுதியில் ஓர் அறையில் தங்கியிருந்த 2 பேரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தனர்.

விசாரணையில் தெரியவந்த தகவல்கள் குறித்து பொலிஸார் தரப்பில் கூறப்படுவதாவது:-

விடுதியில் இருந்த இருவரும் மேற்குவங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டம் கியாபரி பகுதியைச் சேர்ந்த தில்குமார் தாபாமங்கர் (வயது 34), கவாஸ் (வயது 36) ஆகியோர் மேற்கு வங்கத்தில் இருந்து இராமேஸ்வரம் வழியாக இலங்கைக்கு ஹசீஸ் போதைப்பொருளைக் கடத்தத் திட்டமிட்டுள்ளனர். இதற்காக காரில் இரகசிய அறை அமைத்து 75 கிலோ ஹசீஸ் போதைப்பொருளை மறைத்து வைத்துக்கொண்டு, மேற்கு வங்கத்தில் இருந்து புறப்பட்டு வந்துள்ளனர்.

காரில் 1,500 கிலோ மீற்றர் தூரத்துக்கு மேல் பயணம் செய்ததால், வேளாங்கண்ணியில் அறை எடுத்து தங்கிவிட்டு நேற்று (14) இராமேஸ்வரம் சென்று படகு மூலம் போதைப்பொருளை இலங்கைக்கு அனுப்ப அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

அவர்கள் 2 பேரையும் க்யூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர். 75 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இதன் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.150 கோடி ஆகும்.

இவர்களுக்குத் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர்தான் செல்போன் வழியாக வழித்தடம் (ரூட் மேப்) போட்டு கொடுத்துள்ளார். அவரைக் கைது செய்ய தஞ்சையில் இருந்து பொலிஸார் தேனி மாவட்டம் விரைந்துள்ளனர்.

# நச்சுப் போதைப்பொருட்களுடன் மீன்பிடிக் கப்பல் ஒன்று சிக்கியது

## அறுவர் கடற்படையினரால் கைது




சர்வதேச கடற்பகுதியில் மீன்பிடிக் கப்பலொன்றில் 200 கோடி ரூபா பெறுமதியான நச்சுப் போதைப்பொருட்களை ஏற்றிச் சென்ற 6 கடற்றொழிலாளர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, மீன்பிடிக் கப்பலில் நான்கு உரப் பொதிகளில் 100 கிலோகிராமுக்கும் அதிகமான நச்சுப் போதைப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பல நாள் மீன்பிடிக் கப்பல் தற்போது போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளின் விசேட பாதுகாப்பின் கீழ் காலித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# காரைதீவில் ‘வெல்த் கோப்’ புதிய வங்கிக் கிளை திறப்பு!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வெல்த் கோப் வங்கியின் 49 ஆவது கிளை காரைதீவில் நேற்று முன்தினம் (13) வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வங்கியின் முகாமையாளர் செல்வி டெலினா பீட்டர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து கொண்டார்.

வங்கியின் தலைவர் தேசமான்ய கீர்த்தி மகோத்தி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். வங்கியின் பிராந்திய முகாமையாளர் தானியாவும் கலந்து கொண்டார்.

21 வருட சேவையை கொண்ட இந்த வங்கி அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று உஹன சம்மாந்துறை போன்ற



பிரதேசங்களில் இயங்கி வந்தது. தற்போது காரைதீவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கி என்ற காரணத்தினால் இங்கு எவ்வித மான வரியும் அறவிடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பால்நிலை வன்முறைகள் தொடர்பில் யாழ். செயலகத்தில் பயிற்சிப் பட்டறை

**(த.சுபேசன்)**

‘பால் மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான முறைப்பாட்டு முறைமைகள், அடையாளப்படுத்தப்பட்ட சேவை வழங்குநர் மற்றும் மாவட்ட பரிந்துரை வலையமைப்பு’ எனும் தலைப்பிலான ஒரு நாள் செல்லுபடியாக்கல் பயிற்சிப் பட்டறை யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியில், இலங்கையின் வடக்கு மாகாணத்தில், கிறிசலிஸ் நிறுவனம் நடைமுறைப்படுத்தும் “பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களினூடாக அமைதி மற்றும் உள்ளடங்கலான தாங்குதிறன் மிக்க சமூகங்களை மேம்படுத்தல்” எனும் கருத்திட்டத்தின் ஓர் அம்சமாக முன்னெடுக்கப்பட்ட மேற்படி பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்ட அரச அதிபர், உதவி அரச அதிபர், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச்செயலாளர், மாவட்ட மகளிர் அபிவிருத்தி அலுவலர் , மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர், மனித உரிமை ஆணைகுழுவின் பிரதிநிதி உட்பட பல துறை சார் அரச அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது பால் மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பாக கலந்துரையாடி அவற்றுக்கான தீர்வுத் திட்டங்களையும் அடையாளப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# We are HIRING
# Front Office Executive

## CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

**Walk-in-interview on 22-06-2024**

between10.00 am to 12.00 noon



**IIS CITY CAMPUS**

No-655, Navalar Road, Jaffna.

021 222 8060 | 077 666 0054 | www.iis.edu.lk

IIS CITY CAMPUS



Build Your **Dream Home** with us....

**NORTH WALL**

ENGINEERING

"Experience a professional service like no other"

**Our Services:**

- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on

**0777 818 208 / 0774 002 766**

**Nelliyady, Jaffna.**

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சூழும் வினை

'மடியில் கனமிருந்தால்தான் வழியில் பயம்' என்பார்கள். குற்றமிழைக்காவிட்டால் மனம் குறுகுறுக்கத் தேவையில்லை.

இலங்கைப் படைகள் மீதான குற்றச்சாட்டுக்கள் விடயத்திலும் இதுதான் நிலைமை. உண்மை. யதார்த்தம்.

இலங்கை அரசும் பாதுகாப்புப் படையினரும் பீற்றுகின்றமை போல யுத்தத்தின் போது அவர்கள் யுத்தக் குற்றங்கள் இழைக்கவில்லையாயின் - மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களில் ஈடுபடவில்லையாயின் - அடிப்படை மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளவில்லையாயின் - அவர்களுக்கு அஞ்சுவதற்கு இடமே இல்லை.

ஆனால் விசாரணை என்றதும் இலங்கைப் பாதுகாப்புத் தரப்புத் துடியோ துடியெனத் தடுமாறுகிறது.

இந்தக் குற்றங்கள், கொடூரங்கள், மீறல்கள் குறித்து உள்நாட்டிலும் நீதி, நியாயமான விசாரணைகள் நடக்கவில்லை. சர்வதேசத்திலும் இன்னும் இடம்பெறவில்லை.

உள்நாட்டில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக, சர்வதேசத் தரப்புகளின் பங்கு பற்றுதலுடன் விசாரணைகள் என்றதும், நாட்டின் இறைமையை மீறிய நடவடிக்கை என்று துள்ளிக்குதிக்கும் பேரினவாதம், வெளிநாட்டு விசாரணைகளுக்கும் உடன்படுவதாக இல்லை.

இந்த விடயத்தில் பார்த்துக் காத்திருந்த சர்வதேசம், 15 வருடங்கள் தாண்டிய நிலையில், இனியும் இலங்கை தரப்பை நம்பிப் பார்த்திருப்பதில் அர்த்தமில்லை என்று கருதித் தன் பாட்டில் விசாரணைகளுக்கான முன் நகர்வுகளை பல முனைகளில் ஆரம்பித்து உள்ளது.

அது குறித்து மோப்பம் பிடித்துள்ள ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரியான வைஸ் அட்மிரல் சரத் வீரசேகர துள்ளிக்குதிக்கின்றார். கலவரப்படுகின்றார்.

இலங்கை இராணுவம் மற்றும் நாட்டில் போருக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கியவர்களுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைக்கு களம் தயாரிப்பதற்கான வெளிப்புற பொறிமுறையொன்று நடைமுறையில் இருப்பதாக அவர் தம் சிங்கள மக்களுக்கும் சிங்கள அரசுக்கும் அபாய எச்சரிக்கை ஒலி எழுப்பியிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவராக இருக்கும் ஓய்வுபெற்ற வைஸ் அட்மிரல் சரத் வீரசேகர நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கடைசி துறைசார் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போது, இலங்கையில் போர்க்குற்றம் புரிந்தனர் எனப் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு எதிராக ஜெனீவாவில் ஸ்தாபிக்கப்பட்ட வெளிப் பொறிமுறையின் சமீபத்திய அறிக்கையில் அவர்களுக்கு கணிசமான அளவு ஆதாரங்கள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெற்றியை பெற்றுத்தந்த நாட்டின் கதாநாயகர்களான வீரர்கள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பான சாட்சியங்களை சேகரிப்பதற்கான வெளிப்புற பொறிமுறையொன்று ஜெனிவாவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி பொறிமுறையினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில், இந் நாட்டு இராணுவத் தலைவர்களுக்கு எதிரான கணிசமான அளவு ஆதாரங்கள் தங்களிடம் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது என அவர் சொன்னார்.


போர்க்குற்றம் புரிந்தவர்கள் எனக் கண்டறியப்பட்ட இலங்கையின் இராணுவத் தலைவர்களுக்கு எதிராக உலகளாவிய அதிகார வரம்பிற்குட்பட்ட சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு பல நாடுகள் தற்போது ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன என்று எச்சரித்தார் அவர்.

இந்த வெளிப்புற பொறிமுறை இலங்கையின் வெளிவிவகார அமைச்சினால் நிராகரிக்கப்பட்ட போதிலும், இலங்கையின் இராணுவத் தலைவர்களுக்கு எதிரான சாட்சியங்களைத் தொடர்ச்சியாக சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்றும், இலங்கையின் இராணுவ அதிகாரிகள் எந்த நாட்டிலும் கைது செய்யப்படலாம், சர்வதேச நீதிமன்றம் உட்பட உலகின் எந்த நீதிமன்றத்திலும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படலாம் என்பதே இதில் உள்ள ஆபத்தான நிலைமையாகும் என்றும் தம்மளவில் அச்சம் தெரிவிக்கின்றார் சரத் வீரசேகர.

இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தமாக அல்ல, தமிழர்களுக்கு எதிரான யுத்தமாக வர்ணிக்கும் திறன் இந்த வெளிப் பொறிமுறைக்கு இருப்பதாகவும் அந்தக் கலந்துரையாடலில் கூறப்பட்டிருக்கின்றது.

இந்தச் செயற்பாடு இலங்கை வீரர்களின் சுயமரியாதைக்கும், தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக உள்ளதாகவும், ஏனைய நாடுகள் போர்க்குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை நிறுத்துவதற்கு வெளிவிவகார அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சரத் வீரசேகரா தலைமையிலான அந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

வினை விதைத்தவர்கள் வினையை அறுத்துத்தானாக வேண்டும். பல்லாயிரம் தமிழர்களை ஈவிரக்கமின்றிக் கொன்றொழித்த பேரினவாத வெறிக் கொடூரத்தின் பாவங்களுக்குத் தண்டனை அனுபவிப்பதினின்றும் இலகுவில் யாரும் தப்பி விட முடியாது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# புத்தளம் ரத்மல்யாய மயான வீதி பிரதேசத்து மக்களால் புனரமைப்பு

(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ரத்மல்யாய கிராமத்தின் முஸ்லிம் மயான வீதி பிரதேச இளைஞர் குழுக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன் நேற்று வெள்ளிக்கிழமை புனரமைக்கப்பட்டு கொங்றீட் இடப்பட்டது.

இந்த முறை புத்தளத்தில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளத்தால் ரத்மல்யாய மயான வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத வண்ணம் காணப்பட்டது.

இது விடயமாகக் கவனத்தில் எடுத்த பிரதேச மக்கள் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன், இளைஞர் குழுக்கள், சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து இந்தப் பாதையில் காணப்பட்ட குழிகளை முழுமையாக நிரப்பி நீர் வழிந்தோடும் வண்ணம் ஒழுங்கமைத்து பாதைக்குக் கொங்றீட் போட்டனர்.

# வெல்வோம் ஸ்ரீலங்கா எனும் திட்டத்தில் கற்பிட்டிப் பாடசாலைக்கு ஸ்மார்ட் போர்ட்




(எம்.எச்.எம் சியாஜ்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் கீழ் "நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீ லங்கா ஸ்மார்ட் சூரன்களோடு" எனும் வேலைத்திட்டம் மாவட்டம் தோறும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி புத்தளம் மாவட்டத்துக்கான செயற்றிட்டம் சிலாபம் சார்லி குரேயா மைதானத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது கற்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எச்.யூ. பரீதா பாடசாலைக்கான ஸ்மார்ட் போர்டை அமைச்சரிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இந் நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அலி சப்ரி ரஹிம் மற்றும் சிந்தக மாயாதுன்னே, புத்தளம் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.



# நெற் செய்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கான விழிப்புணர்வு

(றிஸ்வான் சாலிஹூ)

தற்போது அக்கரைப்பற்று பிராந்தியத்தில் வேளாண்மை நெற் செய்கையில் ஏற்பட்டுள்ள மஞ்சளாதல் பிரச்சினையை உரிய முறையில் அடையாளம் கண்டு அதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு செயற்றிட்டம் அக்கரைப்பற்று ஆலிம் நகர் விவசாய விரிவாக்கல் பிரிவின் விவசாயப் போதனாசிரியர் ஏ.ஜி.பிர்னாஸ் ஹரீஸ் தலைமையில்  ஆலிம் நகர் பகுதியில் இடம்பெற்றது.

வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் விவசாயக் காணிகளுக்கு விவசாயிகளுடன் சென்ற போதனாசிரியர் விவசாயிகளுக்கு அறிவுரைகளையும், இந்த நோய் தாக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது போன்ற வழிமுறைகளையும்  தெரிவித்தார்.



இதில் அதிகள விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.






# புகைத்தல் போதைப் பொருளுக்கு எதிராக களுவாஞ்சிக்குடியில் விழிப்புணர்வு பேரணி



(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து விழிப்புணர்வு பேரணி ஒன்றை நடத்தியது.

“நண்பா போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம். வலுவான தேசம் ஒன்றை நிதமும் கட்டியெழுப்புவோம்” எனும் தொனிப் பொருளின் கீழ் மகிழூர்முனை சக்தி வித்தியாலய முன்றலில் ஆரம்பமான பேரணியில் புகைத்தல் மற்றும் போதை பழக்கத்தால் ஏற்படும் பாதக விளைவுகளை குறிக்கும் பதாதைகளை ஏந்தி கோசங்களையெழுப்பிய வண்ணம் மகிழூர் பொது மைதானத்தை அடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சிரேஷ்ட விரிவுரையாளர் க. மோகனதாசன் நெறியாள்கையில் ‘ஆடல் நிலம்’ வழங்கிய “விரல் இடுக்கில் கசியும் உயிர்” எனும் தலைப்பிலான புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு வீதி நாடகமானது கலந்து கொண்டோர் அனைவரதும் வரவேற்பைப் பெற்றது.

இந்தப் பேரணியில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









# நூல் வெளியீட்டு நிகழ்வு!





(பழுவூரான்)

கலாநிதி வா. குணா பாலசிங்கம் எழுதிய "கிழக்கிலங்கையில் முருக வழிபாடும் வரலாறும் வழமைகளும்" நூல் வெளியீட்டு நிகழ்வு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகிய கற்கை நிறுவகத்தில் கிழக்கு பல்கலைக் கழக புவியியல் துறை விரிவுரையாளர் கே.ராஜரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வா. கனகசிங்கம் பிரதம அதிதியாகவும், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் திருமதி பாரதி புளோரன்ஸ் கென்னடி சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இலக்கியவாதிகள் மாணவர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையைக் கிழக்குப் பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் நா.வாமணனும், தலைமையுரையைக் கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் கே.ராஜரத்தினமும், நூல் அறிமுக வுரையைத் தென் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நா. சுபராஜும், மதிப்புரையை பேராசிரியர் திருமதி அம்மன்கிளி முருகதாஸும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அதிதிகள் வரவேற்கப்பட்டு இறைவணக்கம், வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன.

இதன்போது நூலாசிரியர் கலாநிதி வா.குணா பாலசிங்கத்தால் பிரதம அதிதி உள்ளிட்ட பிரமுகர்களுக்கு நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.





# வெலிஓயா சம்பத்நுவர பாடசாலையில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவு

## ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட வெலிஓயா சம்பத்நுவர தேசியப் பாடசாலையில் உயர்தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிப்பது சம்பந்தமான கலந்துரையாடல் அதிபர் ரேனுக ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலையக் கல்விப் பணிமனை உயரதிகாரிகள், வெலிஓய பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளின் அதிபர்கள் பங்கேற்றனர்.



நேற்று முன்தினம் (13) சம்பத்நுவர தேசியப் பாடசாலையில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது.



# கிழக்கு பிரதிப் பிரதம செயலாளராக அஸ்மி!



(அபு அலா )

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) கல்முனை மாநகர ஆணையாளராகக் கடமையாற்றிய ஏ.எல்.எம்.அஸ்மி கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டு தனது கடமையை கடந்த (12) புதன்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவை தரம் ஒன்று அதிகாரியான ஏ.எல்.எம்.அஸ்மி நிர்வாக சேவையில் இரு தசாப்தத்தை பூர்த்தி செய்துள்ளார். பொத்துவில், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளராகவும், அக்கரைப்பற்று மாநகர ஆணையாளராகவும், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளரும், பதிவாளருமாகவும் கடமையாற்றியதோடு இறுதியாக கல்முனை மாநகர ஆணையாளராகக் கடமையாற்றியிருந்தார்.

இலங்கை நிர்வாக சேவையில் 20 வருடங்கள் கடந்து பயணிக்கும் இவர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளராக பதவி வகித்துக் கூட்டுறவுத் துறையை பிரகாசிக்கச் செய்தவர்.



# கிழக்கு விவசாய அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்!

(அபு அலா, எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, காணி நிர்வாகம், மீன்பிடி, உணவு வழங்கலும் விநியோகத்துக்குமான அமைச்சின் செயலாளராக சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த எம்.எம்.நசீர் நியமிக்கப்பட்ட நிலையில் அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தையுடைய இவர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) கடமையாற்றி வந்த நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

29 வருட இலங்கை நிர்வாக சேவை அனுபவம் கொண்ட இவர், லாகுகல மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராகவும், சம்மாந்துறை, இறக்காமம், கல்முனை, பொத்துவில், அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று போன்ற பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும், அம்பாறை மாவட்ட செயலகத்தில் மாவட்ட உதவி வறுமை நிவாரண ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பொது நிர்வாக அமைச்சு, வண ஜீவராசிகள் அமைச்சு, வட மத்திய மாகாண அமைச்சு போன்றவற்றின் மேலதிக செயலாளராகவும், கிழக்கு மாகாண பேரவையின் செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராகவும் (நிர்வாகம்) பதவிகளையும் வகித்துள்ளார்.

இதேநேரம், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த பைஷல் ஆப்தீன் நியமிக்கப்பட்டு அவரும் கடமையேற்றுக் கொண்டார்.









# உலக இரத்த தானம் செய்வோர் தினத்தில் மன்னாரில் இடம்பெற்றுள்ள இரத்ததானம்

(மன்னார லெம்பேட்)

உலக இரத்த தானம் செய்பவர்கள் தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை (14) மன்னாரில் காலை முதல் மாலை வரை மாபெரும் இரத்ததான முகாம் இடம் பெற்றது.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் தேசிய இளைஞர் படையணியின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பங்கேற்புடன் மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் படையணி பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் இளைஞர், யுவதிகள் உட்பட பலர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

இதன் போது மன்னார் மெசிடோ நிறுவன பணியாளர்கள், தேசிய இளைஞர் படையணி அதிகாரிகள் மற்றும் வைத்தியர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலயம் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் வெற்றி




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மாணவர்கள் இந்த முறை நடைபெற்ற கோட்ட மட்டத்திலான தமிழ்மொழித் தினப் போட்டிகளில் பங்குபற்றி பெரு வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

ஒன்று தொடக்கம் ஒன்பது வரை வகுப்புகள் உள்ள இந்தப் பாடசாலையில் முதலாம், 2ஆம், 3ஆம் பிரிவு நிலைப் போட்டிகளில் பங்குபற்றி 7 முதலாம் இடங்களையும், 3 இரண்டாம் இடங்களையும், 4 மூன்றாம் இடங்களையும் பெற்று பெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், பயிற்றுவித்த ஆசிரியைகளுக்கும், பாடசாலையின் அதிபர் எம்.ஐ.சம்சுதீன் மற்றும் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

# பசுமையான ரயில் நிலையமாக திருகோணமலை நிலையம் தெரிவு






(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கையின் பசுமையான ரயில் நிலையமாக திருகோணமலை ரயில் நிலையம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையால், இலங்கையில் உள்ள சகல ரயில் நிலையங்களுக்கும் இடையே நடத்தப்பட்ட பசுமையான ரயில் நிலையத்துக்கான தேர்வில் தெரிவாகிய எட்டு ரயில் நிலையங்களில் திருகோணமலை ரயில் நிலையமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு ரயில் நிலையம் திருகோணமலை ரயில் நிலையம் ஆகும்.

சுற்று சூழல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விருது வழங்கல் வைபவத்தில் பசுமையான ரயில் நிலையத்துக்கான சான்றிதழ் திருகோணமலை ரயில் நிலைய அதிபர் சர்வேஸ்வரனுக்கு வழங்கப்பட்டது

# மழைநீர் சேகரிப்பு அமையத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு இடையில் விவாத போட்டி








(மன்னார்)

இலங்கை மழை நீர் சேகரிப்பு அமையமானது கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மழை நீர் தாங்கிகள் மூலம் மக்களுக்கு தரமான மற்றும் சுகாதாரமான குடி தண்ணீரை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தற்போது இலங்கையில் வெள்ளம் மற்றும் வறட்சி ஏற்படும் பிரதேச மக்களுக்கு 'சுத்தமான குடி தண்ணீரைப் பெற்றுக் கொடுத்தல்' எனும் செயற்றிட்டத்தின் கீழ் செயற்பட்டு வருகிறது.

இதன் ஒரு அங்கமாக பாடசாலை மாணவர்களிடையே மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தை அறிவூட்டும் முகமாக மழைநீர் சேகரிப்பு தொடர்பான விவாதப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.

அதற்கமைவாக வடமாகாணத்தின் மன்னார் மாவட்டங்களில் இருந்து மழைநீர் சேகரிப்பு தாங்கிகள் மூலம் பயனடைந்த பாடசாலை மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றியுள்ளனர்.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் மன்னார் மற்றும் மடு கல்வி வலயததுக்கு உட்பட்ட 12 பாடசாலைகளுக்கு இடையிலான முதலாம் சுற்று விவாதப் போட்டி முருங்கனில் அமைந்துள்ள ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தில் இடம்பெற்றது .

நிகழ்வில் இலங்கை மழைநீர் சேகரிப்பு ஒன்றிய உத்தியோகத்தர்கள், வலய கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# ஆந்திர அமைச்சர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு: துணை முதல்வர் ஆனார் பவன் கல்யாண்



ஆந்திர மாநிலத்தில் 164 தொகுதிகளை கைப்பற்றி தெலுங்குதேசம் கட்சி கூட்டணி அமோக வெற்றி பெற்ற நிலையில், சந்திரபாபு நாயுடு 4 ஆவது முறையாக முதல்வராக பதவியேற்றார். இவரது அமைச்சரவையில் மொத்தம் 24 அமைச்சர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், சந்திரபாபு நாயுடு அமைச்சர்கள் அனைவருக்கும் நேற்று துறைகளை ஒதுக்கினார். இதில் முதல் அமைச்சர் சந்திரபாபு நாயுடுவுக்கு பொது நிர்வாகம், சட்டம்-ஒழுங்கு, பொது நிறுவனங்கள் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

துணை முதல்வராக நியமிக்கப்பட்ட பவன் கல்யாணுக்கு பஞ்சாயத்து ராஜ், கிராமிய வளர்ச்சி துறை, கிராமிய குடிநீர் விநியோகம், வனத்துறை, சுற்றுசூழல், விஞ்ஞானம் மற்றும் அறிவியல் துறை ஒதுக்கப்பட்டது.

சந்திரபாபு நாயுடுவின் மகன் லோகேஷுக்கு ஐ.டி, கல்வி துறை வழங்கப்பட்டுள்ளது. அச்சம் நாயுடுவுக்கு கூட்டுறவு, விவசாயம், மீன்வளம் மற்றும் கால்நடை துறை ஒதுக்கப்பட்டது. அனிதாவிற்கு உள்துறையும், பா.ஜ.க. அமைச்சர் சத்யகுமார் யாதவுக்கு ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலம் என மொத்தம் 24 அமைச்சர்களுக்கும் துறைகள் ஒதுக்கப்பட்டன. ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு முதல்வராக கடந்த வியாழக்கிழமை மாலை அமராவதியில் பொறுப்பேற்று கொண்டார். அப்போது அவர் தேர்தல் வாக்குறுதிப்படி மாத உதவித்தொகைகளை அதிகரிக்கும் கோப்பில் கையெழுத்திட்டார்.



## சர்ச்சைக்கு முடிவு:

# தமிழிசை சவுந்தரராஜனை சந்தித்தார் அண்ணாமலை

சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனை அவரது இல்லத்துக்குச் சென்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை சந்தித்தார்.

இது தொடர்பாக அண்ணாமலை தனது எக்ஸ் பக்கத்தில்,

“இன்றைய தினம், மூத்த பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரும், தமிழக பா.ஜ.க. மாநிலத் தலைவராகத் திறம்படச் செயல்பட்டவருமான, அக்கா தமிழிசையை அவர்கள் இல்லத்திற்குச் சென்று நேரில் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி. தமிழகத்தில் தாமரை நிச்சயம் மலரும் என்பதை உறுதியுடன் கூறி, அதற்காகக் கடினமாக உழைத்த அக்கா தமிழிசையின் அரசியல் அனுபவமும், ஆலோசனைகளும், கட்சியின் வளர்ச்சிக்கான உத்வேகத்தைத் தொடர்ந்து அளித்துக் கொண்டிருக்கிறது.” என்று பதிவிட்டுள்ளார்

அண்ணாமலை பதிவை பகிர்ந்து, “தமிழக பா.ஜ.க. மாநிலத் தலைவர் அன்புத்தம்பி அண்ணாமலையைச் சந்தித்ததில் மகிழ்ச்சி.” என்று தமிழிசை பதிவிட்டுள்ளார்.

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: வேட்பாளரானார் அன்புமணி

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில் பா.ம.க. சார்பில் அக்கட்சியின் துணைத் தலைவர் சி.அன்புமணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு எதிர்வரும் ஜூலை 10 ஆம் நாள் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளராக மாநிலத் துணைத் தலைவர் சி.அன்புமணி போட்டியிடுவார்.

விக்கிரவாண்டி தொகுதி பாமக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சி. அன்புமணி, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸை இன்று தைலாபுரம் தோட்ட இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏவான தி.மு.கவைச் சேர்ந்த புகழேந்தி உடல் நலக்குறைவால் காலமானதைத் தொடர்ந்து அத்தொகுதிக்கு ஜூலை 10 ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று தொடங்கியது.



# இத்தாலிய நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மோதலில் எதிர்க்கட்சி உறுப்பினர் காயம்



தெற்கு இத்தாலி மக்களிடையே ஏழ்மை அபாயம் உள்ளதாக நேற்று இத்தாலி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தெரிவித்த கருத்துக்கு பின்னர் ஏற்பட்ட மோதலில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் காயமடைந்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜி-7 நாடுகளின் ஏழு நாடுகளின் தலைவர்களின் மாநாடு தெற்கு இத்தாலியின் அபுலியாவில் நடைபெற்று வரும் நிலையில், நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மோதலால் இத்தாலி அரசு மிகவும் கவலையடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜி-7 நாடுகளின் தலைவர்களின் மூன்று நாள் உச்சி மாநாடு இன்று நிறைவடையவுள்ளதுடன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உட்பட 6 வளர்ச்சியடைந்த நாடுகளின் தலைவர்கள் இதில் இணைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ள இத்தாலிய வெளிவிவகார அமைச்சர், அரசியல் முரண்பாடுகளை மோதலின்றி தீர்த்து வைப்பது இரு கட்சிகளுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் பொறுப்பாகும் என தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பு

ஜி-7 மாநாட்டிற்கு வருகை தந்த உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கியை இந்திய பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் பிரதமர் மோடி, தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், "உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியுடன் மிகவும் பயனுள்ள சந்திப்பு நடைபெற்றது.

உக்ரைனுடன் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இந்தியா ஆர்வமாக உள்ளது. அத்துடன், போரில் மனிதாபிமானத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறையை இந்தியா நம்புகிறது என்றும், பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திரம் மூலம் அமைதிக்கான வழி ஏற்படும் எனவும் வலியுறுத்தினேன்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி-7 மாநாடு இத்தாலியில் இடம்பெற்று வருகிறது.

அந்தவகையில், ஜி-7 மாநாட்டை தலைமையேற்று நடத்தும் இத்தாலி அரசு, இந்தியா உள்பட 12 வளரும் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்ததமை குறிப்பிடத்தக்கது.







# தென்னாப்பிரிக்காவின் ஜனாதிபதியாக சிறில் ரமபோசா மீண்டும் தெரிவானார்

தென்னாப்பிரிக்காவின் ஜனாதிபதியாக சிறில் ரமபோசா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியிற்கும் எதிர்க்கட்சிகளிற்கும் இடையிலான முக்கிய கூட்டணி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்த தெரிவு இடம்பெற்றுள்ளது.

அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் ஊடாக சிறில் ரமபோசா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நாட்டின் நலனுக்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என தென்னாப்பிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா தமது உரையில் தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 06

கனடா முரசு

சனிக்கிழமை 15/06/2024

## ஒன்ராரியோவில் மின் துண்டிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 15
ஒன்ராரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் பல்லாயிரக் கணக்கானோர் மின்சாரத்தை இழந்துள்ளனர்.
C2

# கனடாவில் தங்கச் சூறையாடல் சூத்திரதாரி சரணடையத் தயார்!

## அவரது சட்டத்தரணி மூலம் தகவல்

ஒன்ராரியோ, ஜூன் 15
டொரன்டோ பியர்சன் விமான நிலையத்தில் தங்கம் சூறையாடப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் ஒருவர் விரைவில் பொலிஸாரிடம் சரணடையவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எயார் கனடாவின் முகாமையாளராக விருந்த சிம்ரன் பிரீத் பனேஷர் என்பவர் இந்தத் தங்கக் கடத்தல் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வருகின்றார்.
C2



# டொரன்டோ சென் போல்ஸ் தொகுதியில் முன்கூட்டிய வாக்களிப்பு தொடங்கியது!

## மொத்தம் 84 வேட்பாளர்கள் போட்டியில்

ஒன்ராரியோ, ஜூன் 15 -
டொரன்டோ சென் போல்ஸ் தொகுதியில் 84 வேட்பாளர்கள் போட்டியிடும் இடைத் தேர்தலுக்கான முன்கூட்டிய வாக்களிப்பு ஆரம்பமாகியுள்ளது.

இந்தத் தொகுதிக்கான மத்திய இடைத்தேர்தல் ஜூன் மாதம் 24ஆம் திகதி நடைபெறுகிறது.

ஆனாலும் முன்கூட்டிய வாக்களிப்பு ஜூன் 14ஆம் திகதி ஆரம்பமாகி, 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொகுதியில் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத எண்ணிக்கையில் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த லிபரல் கட்சியின் கரோலின் பென்னட் பதவி விலகிய நிலையில் இந்த இடைத் தேர்தல் நடைபெறுகிறது.

மூன்று தசாப்தங்களாக இந்த தொகுதியை லிபரல் கட்சி பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் இடம்பெற்ற நூதன மோசடி மக்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை!

கனடாவில் இடம்பெற்ற நூதன மோசடி சம்பவமொன்று தொடர்பில் பொலிஸார் தகவல் வெளியிட்டு, அத்தகைய சம்பவங்க குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி பிரஜைகளைக் கோரியுள்ளனர்.

ஒன்றாரியோவைச் சேர்ந்த பெண் ஒருவர் இந்த மோசடி காரணமாக ஐயாயிரம் டொலர்களை இழக்க வேண்டிய ஆபத்து நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாம் ஓடர் செய்யாத மடிக் கணனி ஒன்று வீட்டு வாசலில் தங்களுக்கு டெலிவரி செய்யப்பட்டதாக அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

தாம் ஓடர் செய்யாத போதிலும் குறித்த மடிக் கணனி பெட்டியில் தமது வீட்டு முகவரி காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரிடம் அந்தப் பெண்ணும் அவரது



கணவரும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன் போது அந்தத் தம்பதியினரின் கடன் அட்டைக் கணக்கிலிருந்து 4900 டொலர்கள் அறவீடு செய்யப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

நூதமான முறையில் கடன் அட்டைத் தகவல்களை திருடி மடிக்கணனி ஓடர் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் யாரும் இருக்க மாட்டார்கள் என நினைத்து, மோசடிகாரர்கள் இந்த மோசடியை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடன் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கே பொருளை அனுப்பி , அது டெலிவரி செய்யப்படும் போது வீட்டில் யாரும் இல்லாவிட்டால் அந்தப் பொருளை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து தெளிவுபடுத்தி இந்த கடன் அட்டை நிறுவனத்திடமிருந்து அந்தத் தம்பதியினர் பணத்தை மீளப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

வங்கிக் கணக்குள், கடன் அட்டைகள் உள்ளிட்டன தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கனடியப் பூர்வீகக்குடியினருடைய கலைப் பொருள்களை மீளளிக்குக!

## பாப்பரசரிடம் பிரதமர் ட்ரூடோ நேரில் வேண்டுகோள்

ஒன்ராரியோ, ஜூன் 15 -

வத்திக்கானில் தொல்பொருள்களாகக் குவித்து வைக்கப்பட்டுள்ள கனடியப் பூர்வீகக் குடியினரின் கலாசார கலைப் பொருள்களை மீண்டும் அவர்களிடமே வழங்க வேண்டும் என கனடியப் பிரதமர் ட்ரூடோ கடந்த வெள்ளிக்கிழமை பாப்பரசர் பிரான்சிஸிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜி7 தலைவர்கள் உச்சி மாநாட்டிற்காக இத்தாலிக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பாப்பரசர் பிரான்சிஸ் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

கனடாவின் பூர்வீகக்குடியினருடனான நல்லிணக்க பணியை முன்னெடுக்கும் பாப்பரசருக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

பூர்வீகக்குடியினருடைய உடைமைகளான கலாசார கலைப்பொருள்களை வத்திக்கான் மீண்டும் வழங்க வேண்டிய அவசியத்தை பிரதமர் இந்த சந்திப்பில் வலியுறுத்தினார்.



## கனடாவில் தங்கச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறம்டன் நகரை சேர்ந்த 31 வயதான இவருக்கான பிடியாணை நாடளாவிய ரீதியில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பனேஷர் பொலிஸாரிடம் சரணடைய தயாராகவுள்ளார் என அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அவர் தற்போது வெளிநாடு ஒன்றில் உள்ளார் எனக் கூறும் சட்டத்தரணி, அடுத்த சில வாரங்களில் அவர் தானாக முன்வந்து கனடா திரும்பி சரணடையத் திட்டமிட்டுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக பனேஷர் தற்போது எந்த நாட்டில் உள்ளார் என்ற தகவலை அவரது சட்டத்தரணி வெளியிடவில்லை.

அவர் தனது மனைவியுடன் இந்தியாவில் இருந்தமைக்கான சாத்தியக்கூறுகளை பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு பியர்சன் விமான நிலையத்தில் தங்கம் சூறையாடப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த ஒன்பது சந்தேக நபர்கள் புலனாய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

22.5 மில்லியன் டொலர் தங்க சூறையாடல் கனடிய வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய தங்க அபகரிப்பு எனக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எயார் கனடா வளாகத்தில் இருந்து சுமார் 20 மில்லியன் டொலர் மதிப்புள்ள 6,600 தூய தங்கக் கட்டிகள், சுமார் 2.5 மில்லியன் டொலர் மதிப்பிலான பல்வேறு நாடுகளின் பணம் என்பன அபகரிக்கப்பட்டன.

## ஒன்ராரியோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜூன் 13ஆம் திகதி ஏற்பட்ட கடுமையான இடியுடன் கூடிய மழை காரணமாக ஒன்ராரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் பல்லாயிரக்கணக்கானோர் மின்சாரத்தை இழந்தனர்.

இரண்டு மாகாணங்களிலும் மொத்தமாக 60,000 அல்லது அதற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் மின்சாரத்தை இழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒன்ராரியோ மாகாணத்தின் டிம்மின்ஸ் நகரில் இருந்து, ஒன்ராரியோ மாகாணத்தின் சென் லோரன்ஸ் ரிவர் பகுதிவரை பாதிக்கப்பட்ட பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

# கனடாப் பட்டமளிப்பு விழாவில் தமிழ் மாணவி இலங்கை இராணுவத்தை கடுமையாகச் சாடல்



கனடாவில் நடைபெற்ற பட்ட மளிப்பு விழாவொன்றில் பங்குபற்றிய தமிழ் மாணவி இலங்கை இராணு வத்தைக் கடுமையாக சாடியுள் ளார்.

இலங்கையில் இன்று வரையிலும் தமிழ் மாணவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்கின்றன என அவர் குற்றஞ்சாட்டி உள்ளார்.

கனடாவின் வின்ட்ஸோர் பல் கலைக்கழக பட்டமளிப்பு நிகழ்வில் சரிகா நவநாதன் என்ற தமிழ் மாண வியின் உரை சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளது.

இன வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுத்த மாணவர்கள் இலங் கைப் படையினரால் கொல்லப்பட் டனர் எனவும் கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வித தடையும் இன்றி பாது காப்பான முறையில் கனடாவில் தாம் பட்டப் படிப்பினை பூர்த்தி செய் தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வரப்பிரசாதம் தமது தாயக பூமியான இலங்கை மாணவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரி வித்துள்ளார்.

மேலும் பலஸ்தீனத்தில் தற்பொ ழுது இதே நிலைமை நீடித்து வருவ தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



# அடுத்த ஜி7 மாநாடு கனடாவில் நடக்கும்

ஒன்ராரியோ, ஜூன் 15

அடுத்த வருடம் ஜூன் மாதம் கனடாவில் ஜி7 தலை வர்களின் உச்சிமாநாடு நடைபெறவுள்ளதாக கனடா தெரிவித்துள்ளது.

இத்தாலியின், அபுலியாவில் நடைபெற்று வரும் ஜி7 தலைவர்களின் உச்சிமாநாட்டின் போதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கனடா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் சுழற்சி முறையில் ஜி7 தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கல்கரியின் தென்மேற்கே, கனனஸ்கிஸ் பகுதியில் அடுத்த வருடம் ஜி.7 மாநாடு நடைபெறும் என கனடா அறிவித்துள்ளது.

# சிறுபான்மை லிபரல் அரசுக்கான ஆதரவை புதிய ஜனநாயகக் கட்சி முறிக்க மாட்டாது

ஒன்ராரியோ, ஜூன் 15

கனடாவின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் தவறியதற்காக பிரத மரை விமர்சித்த பிறகும், சிறு பான்மை லிபரல் அரசாங்கத்துடன் உறவை முறித்துக் கொள்ளத் தயா ராக இல்லை என புதிய ஜன நாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

அண்மைய புலனாய்வு கண் காணிப்பு அறிக்கையில் ஜஸ்டின் ட்ரூடோ சில அளவிலான வெளி நாட்டு தலையீட்டை ஏற்கத் தயா ராக இருக்கிறார் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இது ஜனநாயகத்தை பலவீனப் படுத்துகிறது மற்றும் கனேடியர் களின் நம்பிக்கையை குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது.

பல நாடாளுமன்ற உறுப்பினர் கள் தெரிந்தே வெளிநாட்டு அரசாங் கங்களுக்கு உதவி வழங்கியுள் ளனர் என்று தேசிய பாதுகாப்புக் குழுவின் திருத்தப்படாத அறிக் கையை மதிப்பாய்வு செய்த பின் னர் சிங் கருத்து தெரிவித்துள் ளார்.

'அவர் அந்த உளவுத்துறையுடன் உடன்படாமல் இருக்கலாம், ஆனால் இதை சமாளிக்க அவர் எடுக்க வேண்டிய நடவடிக்கை களை அவர் எடுக்கவில்லை என்று நான் நம்புகிறேன்' என்று சிங் கூறியுள்ளார்.





# ஊழலை அம்பலப்படுத்திய ஊடகங்களுக்கு கௌரவம்

ஒன்ராரியோ, ஜூன் 15

ஒன்ராறியோவின் கிரீன்பெல்ட் ஊழலைப் பற்றி புகாரளித்தமைக்காக நார்வால் மற்றும் டொராண்டோஸ்டார் என்பன 2023ஆம் ஆண்டிற்கான மிச்செனர் விருதை வென்றுள்ளன.


2023 ஆம் ஆண்டு முழுவதும் அந்த சஞ்சிகையும், பத்திரிகையும் முதல்வர் டக் ஃபோர்ட்டின் கிரின்பெல்ட் விவகாரம் தொடர்பில் தொடர்ந்து நடுநிலையான அறிக்கைலளை வெளியிட்டு வந்தன என மிச்செனர் விருது குழாம் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையிடல்கள் டக் ஃபோர்ட் மீதான விசாரணைக்கும், திட்டத்தினை கைவிடுவதற்கும் முக்கியமானமவர்கள் பதவி விலகுவதற்கு வழிகோலியதாகவுன் அந்தக் குழாம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கனடாவின் உளவு நிறுவனத்தின் பாலியல் தாக்குதல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பல மாதங்கள் புலனாய்வு செய்தமைக்காக கனடியன் பிரஸின் செய்தியாளர் டெரில் கிரீர் இந்த விருதுக்கு முன்மொழியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெட்டிய 625 மில்லியன் டொலர்களையும் திருப்பித் தர மத்திய அரசுக்கு வற்புறுத்து

## மாகாண, பிராந்திய தொழிலாளர் அமைச்சர்கள் கோரிக்கை



ஒன்ராரியோ, ஜூன் 15

கனடாவின் மாகாண மற்றும் பிராந்திய தொழிலாளர் அமைச்சர்கள் திங்களன்று தங்கள் மத்திய அரசாங்க பிரதிநிதியை சந்தித்து, தொழிலாளர் சந்தை பரிமாற்ற ஒப்பந்தங்களில் இருந்து வெட்டிய 625 மில்லியன் டொலர்களை மத்திய அரசு மீண்டும் அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை, கட்டுமானம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு போன்ற முன்னுரிமைத் துறைகளுக்கான திறன் பயிற்சி சேவைகளைப் பராமரிப்பதில் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களின் திறனை கணிசமாக பாதிக்கிறது என்று கூறுகிறது.

இதனால் பாதிக்கப்பட்ட கனேடிய தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளுக்கு ஆதரவாக மாகாண மற்றும் பிராந்திய அமைச்சர்கள் ஒன்றுபட்டுள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

# கனடாவில் மசாஜ் நிபுணருக்கு எதிராக பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டு

கனடாவில் பதிவு செய்யப்பட்ட மசாஜ் நிபுணர் (massage therapist) ஒருவர் பெண் சேவை பெறுநரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார் எனக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

கனடாவில் மில்டன் பகுதியில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் ஹால்டன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொம்சன் வீதியில் அமைந்துள்ள மசாஜ் நிலையம் ஒன்றில் வைத்து இந்த நபர் தம்மை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் எனவந்தப் பெண் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 37 வயதான ஸ்டினடர்பால் சிங் கில் என்பவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் மீது பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஹால்டன், பீல் மற்றும் யோக் பிராந்தியங்களிலும் இவர் தனது சேவையை வழங்கி வந்தார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

இந்த நபர் மேலும் பலரை பாலியல் ரீதியாகத் துன் புறுத்தி இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர்.

அவ்வாறான நபர்கள் தாமாக முன் வந்து முறைப்பாடு செய்ய வேண்டும் என பொலிஸார் கோரியுள்ளனர்.



# முப்பதுக்கும் மேற்பட்ட பெண்களை ஏமாற்றி கப்பம் கோரிய நபர் கைது!



கனடாவில் 30க்கும் மேற்பட்ட பெண்களை ஏமாற்றி கப்பம் கோரிய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

43 வயதான மார்டின் பிள்ளை என்ற நபரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

34 பெண்களுடன் குறித்த நபர் உறவு வைத்துக் கெகாண்டார் என வும், இந்த தருணங்களை குறித்த நபர் காணொளியாகப் படமெடுத் துள்ளார் எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

அந்தப் பெண்களின் அனுமதியின் றியே இவ்வாறு படமெடுக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மிரட்டப்பட்ட பல பெண் கள் பாலியல் தொழிலாளிகள் என சட்டதரணிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நபர் 2019 ஆம் ஆண்டு முதல் பெண்களுடன் தொடர்பு பேணி அவர் களை மிரட்டிப் பணம் பறித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் தங்களது அடையாளத்தை வெளிப்படுத்தும் போது பல்வேறு சாவல்களை எதிர்நோக்க நேரிடுவ தாகவும் வாடகைத் தொகை அதிகரிக் கப்படுவதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. இந்தச் சந்தே நபரினால் பாதிக் கப்பட்டவர்கள் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ட்ரூடோ - மோடி சந்தித்துப் பேச்சு

ஒன்ராரியோ, ஜூன் 15

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இத்தாலியில் நடைபெறும் ஜி7 தலைவர்களின் மாநாட்டின் போது இரு நாடுகளின் தலைவர்களும் சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பை இந்திய பிரதமர் உறுதிப்படுத்தினார்.

இந்திய பிரதமரின் தேர்தல் வெற்றிக்கு ஜஸ்டின் ட்ரூடோ வாழ்த்து தெரிவித்தார் எனக் கனடிய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இருதரப்பு உறவுகள் குறித்து இரு நாட்டின் தலைவர்கள் உரையாடினர் எனக் கனடியப் பிரதமர் அலுவலக பேச்சாளர் அனா கிளாரா வெய்ல னோட் உறுதி செய்துள்ளார்.

ஜி7 நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் இந்தியா பார்வையாளராகப் பங்கேற்கிறது.

கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டுக்குப் பின்னர் இந்த இரு தலைவர்களும் சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.




ஜி20 மாநாட்டின் பின்னர், கனடியரான ஹர்தீப் சிங் நிஜார் படுகொலையில் இந்திய அரசின் தொடர்பு இருப்பதாக நாடாளுமன்றத்தில் பிரதமர் ட்ரூடோ குற்றம் சாட்டியிருந்தார் என்பதும், அதையடுத்து இந்திய - கனடா உறவுகள் நெருக்கடிக்குள்ளாகின் என்பதும் தெரிந்தவையே.

# ட்ரூடோவின் செல்வாக்கு குறைகிறது!



கனடா பிரதமர் ட்ரூடோவுக்கு மக்களிடையே ஆதரவு குறைந்து வருவதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கனடாவில் சமீபத்தில் Angus Reid என்னும் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகள், கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவுக்கு, கனடா மக்களிடையே ஆதரவு குறைந்து வருவதைக் காட்டியுள்ளன.

ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், 28 சதவிகித மக்கள் மட்டுமே ட்ரூடோவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். 66 சதவிகிதம் மக்கள் ஒரு பிரதமராக, ஜஸ்டின் ட்ரூடோவுக்கு தங்கள் ஆதரவு இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

கருத்துக்கணிப்புகளிலோ, ஆளும் லிபரல் கட்சியைவிட எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கு ஆதரவு அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

“மக்கள் என்னை விரும்பவில்லை என்றாலும், கனடாவும், கனேடியர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் நன்றாக இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்ய என்ன செய்வது என்பதை யோசித்து, அதற்காக முயற்சி செய்துகொண்டே இருப்பேன்”- என்று கூறியுள்ளார் ட்ரூடோ.

சமீப காலமாக, இளைஞர்களின் வாக்குகளைக் கவர என்னவெல்லாம் செய்யமுடியுமோ, அதையெல்லாம் செய்துவருகிறார் ட்ரூடோ. Podcastகளில் பங்கேற்பது, பேட்டிகள் கொடுப்பது, யூடியூப் சேனல்களில் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசுவது, ஏன் பெண்கள் கூடைப்பந்து விளையாட்டு குறித்த நிகழ்ச்சியில் கூட கலந்துகொண்டு பேசிவருகிறார் ட்ரூடோ.